புதுச்சேரி அரசு
முப்படை நலத்துறை

<u>முன்னாள் இராணுவ வீரர்களின் (தரைப்படை) விழா 04 மார்ச் 2012 அழைப்பிதழ்</u>

* * * *

வரும் 04 மார்ச் 2012 ஞாயிற்றுக்கிழமை அன்று முன்னாள் இராணுவ வீரர்களின் விழா (Ex-servicemen Rally ) சென்னையில் உள்ள பல்லாவரம் கண்டோன்மென்ட், 25 பஞ்சாப் ரெஜிமென்ட் வளாகத்தில் நடைபெற உள்ளது.

2. இவ்விழாவினை தமிழ்நாடு, கர்நாடாகா மற்றும் கேரளா பிராந்தியம் இராணுவ தலைமையகம் சார்பாக நடைபெற உள்ளது. அன்றைய தினம் முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்கானும் முகாம் மற்றும் நல உதவி வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. எனவே, முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் விதவையர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

மேலும், இவ்விழாவில் தமிழக பகுதிகாளன கடலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை சார்ந்த முன்னாள் இராணுவ வீரர்களும் பங்கேற்க உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ) மருத்துவ முகாம் - இராணுவ சிறப்பு மருத்துவர்காளன, ரண சிகிச்சை, கண், ஆர்த்தோ, பல் மற்றும் பொது மருத்துவர்கள் வருகை தர உள்ளனர்.

(ஆ) இராணுவத்தில் சேர்வதற்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி (இராணுவ தேர்வாணையம், சென்னை)

(இ) ஈசிஎச் ( ECHS ) திட்டத்தில் பதிவது/பயன் பெறுவது சம்மந்தமாக தங்களுக்கு ஆலோசனை/உதவிகள் வழங்குவது

(ஈ) கீழ்கண்ட அலுவலக அதிகாரிகள் மூலம் தங்களின் பென்ஷன் சம்மந்தமாக ஆலோசனை/உதவிகள் வழங்குதல்
Record Offices : (1) MRC Wellington, (2) ASC Bangalore
(3) PNR Bangalore (4) PARA Bangalore (5) MEG Bangalore
(6) DSC Cannanore, (7) MARATHA Li, Belgaum
(8) AOC Secunderabad (9) EME Secunderabad (10) CMP Bangalore

3. எனவே, அனைத்து முன்னாள் இராணுவ வீரர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்விழா 04-03-2012 அன்று காலை 09.00 துவங்கப்பட்டு மாலை 05.30 வரை நடை பெற உள்ளது. எனவே, அதற்கு ஏதுவாக அனைத்து முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் விதவையர்களுக்கு மதிய உணவு, வாகன வசதி (பல்லாவரம் இரயில் நிலையம் மற்றும் தாம்பரம் இரயில் நிலையம் ) செய்து தரப்படும்.

4. இவ்விழாவிற்கு வருகை தரும் அனைத்து முன்னாள் இராணுவ வீரர்கள்/விதவையர்கள் அனைவரும் தங்களுடைய முப்படை நலத்துறை அடையாள அட்டை, இராணுவ பணி சான்று, போன்றவைகளை தவறாமல் எடுத்து வர வேண்டுகிறோம்.

DEPARTMENT OF INFORMATION & PUBLICITY
PUDUCHERRY
GOVERNMENT OF PUDUCHERRY

இயக்குநர் 17/2/12